# இயற்கைக்கு மேம்பட்டவைகள்

5



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# அணில்கள் சிருஷ்டிக்கப்படுதல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 129-150

இதைக் கூறுவதால் மன்னிக்கவும், அன்றொரு நாள் அந்த காடுகளில் உட்கார்ந்து கொண்டிருந்த போது (தேவன் என் நியாயாதிபதி, நான் தவறுரைத்தால் இந்த பிரசங்க பீடத்திலேயே விழுந்து மரிக்கக் கூடும்). அந்த வேதவாக்கியம். என் வாழ்நாள் முழுவதும் புதிராக இருந்தபோது.... அன்று காலை அந்த காடுகளில் நான் உட்கார்ந்து கொண்டு அதைக்குறித்து சிந்தனை செய்து கொண்டிருந்த போது, அந்த சமயம் என்னுடன் பேசினது. அவர், "அந்த வேதவாக்கியம், மற்றெல்லா

வேதவாக்கியங்களைப் போல் உண்மையானது" என்றார்.

நான், "அது எப்படி இருக்க முடியும்?" என்று நினைத்தேன்.

அவர், "நீ...." என்றார். நான் சொன்னேன்....அவர், "பேசு அது அப்படியே நிறைவேறும். சந்தேகப்படாதே" என்றார்.

நான் காடுகளில் உட்கார்ந்து கொண்டு அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். மூன்று நாட்களாக அணில்கள் ஒன்றும் அங்கில்லை, ஒரு அணிலும் இல்லை. நான் காட்டத்திமரம் அடர்த்தியாக வளர்ந்துள்ள இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், அணில்கள் அங்கு வருவதேயில்லை.... அணில் வேட்டையாடும் எவரும், அவை காட்டத்திமரத்தில் இருப்பதில்லை என்பதை அறிவர், நான் அங்கு

உடகார்ந்து கொண்டிருந்தேன், காற்று பலமாக அடித்துக்கொண்டிருந்தது, அது காலை சுமார் பத்து மணியாக இருந்தது, நான் மறுபடியும் யோசித்தேன்.

அப்பொழுது அந்த சத்தம், "நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்டது போல, உனக்கு அணில்கள் தேவைப்படுகின்றன" என்றது.

"அந்த சத்தம் எப்பொழுதுமே என்னிடம் உண்மையைக் கூறி வந்துள்ளது, ஆனால் இது விசித்திரமாயுள்ளதே" என்று எண்ணி, நான் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து எழுந்து, "என்னுடன் பேசிக்கொண்டிருந்த நபர் எங்கே?" என்று சுற்று முற்றும் நோக்கினேன், அங்கு ஒன்றுமே காணப்படவில்லை. காற்று மாத்திரம் பலமாக

அடித்துக்கொண்டிருந்தது. "நான் ஒருக்கால் உறங்கப் போய், சொப்பனம் கண்டேனா?" என்று எண்ணினேன். இல்லை, நான் உறங்கவில்லை. நான் மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு கவனித்துக்கொண்டிருந்தேன். நான் காலை பத்து மணியளவில் சகோ. உட், சகோ. சாத்மன் அவர்களை அங்கு சந்திக்க வேண்டியவனாயிருந்தேன். அங்கு விவசாயிகள் வேலை செய்து கொண்டு, சோளத்தை சேகரித்துக்கொண்டிருந்தனர்.

அந்த சத்தம் மறுபடியும், "நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், உனக்கு வேட்டை பொருள் அவசியம். உனக்கு எத்தனை வேண்டும்? என்றது.

நான் அதிகமாக கேட்க கூடாதென்று நினைத்து - நான் மூன்று அணில்கள் கேட்கப்போகிறேன் என்று மனதில்

எண்ணி, "எனக்கு மூன்று சிவப்பு நிற இளம் அணில்கள் வேண்டும்" என்றேன்.

அவர், "அப்படியானால், அதைக்குறித்து பேசு" என்றார்.

"நான் மூன்று சிகப்பு நிற இளம் அணில்களைப் பெறப் போகிறேன்" என்றேன்.

அவர், "எந்த வழியாக அவை வரவேண்டும்?" என்று கேட்டார்.

"நல்லது, நான் இத்தனை தூரம் சென்று விட்டேன். ஏதோ ஒன்று என்னிடம் இங்கு பேசிக்கொண்டிருக்கிறது" என்று எண்ணினேன் - நான் பேசுவதை நீங்கள் கேட்பது போல், பரலோகத்தின் தேவன், இந்த வேதாகமம் என் இருதயத்தின் மேல் இருக்கும் இந்நேரத்தில், அது உண்மையென்று அறிவார். அவர்... நான்,

“நல்லது...” என்று நினைத்து, ஒரு கேலித்தனமான இடத்தை தேர்ந்தெடுத்தேன். அது தொங்கிக்கொண்டிருந்த ஒரு உலர்ந்துபோன கிளை (என் துப்பாக்கி உள்ள இடத்திலிருந்து சுமார் ஐம்பது கெஜதூரம்).

நான், “முதலாம் அணில் அங்கிருக்க வேண்டும்” என்றேன். அது அங்கிருந்தது.

என் கண்களை நான் துடைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். (என் தலையைத் திருப்பினேன்). “ஒரு தரிசனத்தை நான் சுட விரும்பவில்லை” என்று நினைத்தேன். நான் மறுபடியும் திரும்பிப் பார்த்தேன், அந்த அணில் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. நான் ஒரு தோட்டாவை துப்பாக்கிக்குள் போட்டு குறி வைத்தேன். அந்த சிகப்பு சிற இளம் அணிலின் கறுப்பு கண்ணை என்னால்

காண முடிந்தது. “நான் ஒருக்கால் உறங்கிக் கொண்டிருக்கிறேனா, இன்னும் சில நிமிடங்களில் நான் எழுந்து விடுவேன். நான் அதைக்குறித்து சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறேன்” என்று நினைத்தேன். நான் துப்பாக்கியை சரிமட்டமாக வைத்து, அணிலைச் சுட்டேன். அது கிளையிலிருந்து கீழே விழுந்தது. “எனக்குத் தெரியவில்லையே. அதை சென்று பார்க்க வேண்டுமா?” என்று நினைத்தேன். நான் அங்கு நடந்து சென்றேன். அந்த அணில் அங்கு கிடந்தது. அதை நான் கையிலெடுத்தேன். இரத்தம் அதிலிருந்து வடிந்து கொண்டிருந்தது. ஒரு தரிசனத்துக்கு இரத்தம் வடியாது என்று உங்களுக்குத் தெரியும். அதை நான் கையிலெடுத்தேன். அது ஒரு அணில். என் உடல் முழுவதும் மறத்துப்போனது.

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். “தேவனே, அது நீர்தானா?” என்றேன். நான், “இதற்காக உமக்கு நன்றி. நான் சென்று....” என்றேன்.

அவர், “நீர் சொன்னாய்! நீ சொன்னதை சந்தேகப்படுகிறாயா? உனக்கு மூன்று வேண்டும் என்று கூறினாய். அடுத்தது எங்கிருந்து வர வேண்டும்?” என்று கேட்டார்.

“நான் சொப்பனம் கண்டு கொண்டிருந்தால் தொடர்ந்து சொப்பனம் காண்பேன்” என்று எண்ணினேன்.

நான் சொன்னேன்... நான் மரத்தின் அருகிலுள்ள ஒரு பழைய கம்பத்தை தேர்ந்தெடுத்தேன். அதன் மேல் விஷமுள்ள பசுங்கொடி ஒன்று படந்திருந்தது. அதில் ஒரு அணிலையும் நீங்கள் ஒருக்காலும் காணமுடியாது. நான் “அடுத்த அணில் விஷமுள்ள அந்த

கொடியிலிருந்து வரவேண்டும்'' என்றேன். அப்பொழுது ஒரு சிகப்பு நிற இளம் அணில் அங்கு உட்கார்ந்து கொண்டு, என்னையே பார்த்துக்கொண்டிருந்தது. நான் துப்பாக்கியை கீழே வைத்துவிட்டு என் கண்களைப் பிசைந்தேன். நான் மறுபடியும் திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தேன்... அது தலையை பக்கவாட்டில் சாய்த்த வண்ணம் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்த அணிலை சுட்டு வீழ்த்திவிட்டு, வீடு செல்லப் புறப்பட்டேன்.

அப்பொழுது அவர், "நீ 'மூன்று' கேட்டாயே, நீ சொன்னதை சந்தேகிக்கிறாயா?'' என்றார்.

நான், "இல்லை, ஆண்டவரே, நான் சொன்னதை சந்தேகிக்கவில்லை. ஏனெனில் நீர் அதை உறுதிப்படுத்துகிறீர்'' என்றேன்.

இந்த ஒரு வேதவாக்கியம் எனக்குப் புதிராயிருந்தது: " 'நான் சொன்னால்' என்றல்ல, 'நீ சொன்னால்' " இயேசு சொன்னால் என்றல்ல நீயே அதை சொன்னால்.

"எப்படியோ அந்த வாய்க்காலுக்குள் நான் நுழைந்து விட்டேன். அவர் இங்கிருக்கிறார் என்றறிவேன். எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டது போல இருக்கிறது. இதை இன்னும் அதிக கேலித்தனமாக்குகிறேன்" என்றேன்.

நான், "ஒரு சிகப்பு அணில், அந்த மலையிலிருந்து கீழே இறங்கி இந்த வழியாக வந்து, என் அருகில் வந்து, இங்கிருந்து புறப்பட்டு சென்று அந்த கிளையின் மேல் உட்கார்ந்து அந்த விவசாயியை நோக்க வேண்டும்" என்றேன். நான் உரைத்தப்படியே, அது மலையிலிருந்து கீழே இறங்கி வந்து,

இங்கிருந்து புறப்பட்டு அங்கு சென்று உட்கார்ந்து, அந்த விவசாயியை நோக்கினது. அதை நான் சுட்டேன்.

சாத்தான் என்னிடம், "உனக்குத் தெரியுமா, காடு இப்பொழுது அணில்களால் நிறைந்துள்ளது" என்றான். நான் பன்னிரண்டு மணி வரைக்கும் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தேன். வேறு ஒரு அணிலையும் நான் காணவில்லை. அது எதைக் காண்பிக்கிறதென்றால், தேவன்... அவரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர்.

★★★★★

அந்தப் பையன் இன்றும் பரிபூரணமாகவும், இயல்பாகவும், சுகமாகவும் பின்லாந்தில் ஜீவிக்கிறான், ஏனெனில் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒரு தாயின் ஜெபத்தைக் கனம் பண்ணினார்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது,

செப்டம்பர் 29, 1951,
செயின்ட் நிக்கோலாஸ் அரங்கம்,
நியூயார்க், அமெரிக்கா

26. நான் சென்ற இரவு உங்களிடம் கூறினபடி, பின்லாந்தில் அவ்விரவு அந்த சிறுவன் மரணத்திலிருந்து உயிர்பெற்று எழுந்த போது; அந்தச் சிறு பெண் பிள்ளை. மற்ற பையன் தன்னுடைய தலையில் அடிபட்டவனாய், பலமாக மோதி அடிக்கப்பட்டு வேறொரு இடத்தில் (கிடந்தான்). அவர்கள் மருத்துவனையிலிருந்து எங்களை அழைத்தனர்; அந்த சிறுவன் மரித்துக்கொண்டிந்தான். அந்தச் சிறு பரிதாபமான பின்லாந்து நாட்டு தாய்;

நான் இல்லவே இல்லாமல் ஆகி விட்டேன், அவளுக்காக நான் மிகவும் வருந்தினேன். அங்கே ஆயிரமாயிரக் கணக்கானோர் இருந்தனர். அந்த அரங்கத்திற்கு அருகிலும் உங்களால் போக முடியாது, இரண்டு அல்லது மூன்று நகர வட்டாரங்கள், எவ்விடத்திலும் அவர்கள் நெருக்கமாக இருந்தனர், அது லாப்லாந்திற்கு அருகிலுள்ள பின்லாந்திலுள்ள கோபியோவில்.

ஓ, நாங்கள் கிறிஸ்துவில் என்ன ஒரு அற்புதமான மகிமையான நேரத்தை கொண்டிருந்தோம். ஒரு நாள் இரவு நான் சென்ற போது, அவர்கள் என்னை அந்த சிறு தாயாரிடம் அழைத்துச் சென்றனர். அடுத்த நாள், திருமதி ஐசக்ஸன், "சகோதரன் பிரான்ஹாமே, அந்தச் சிறு பரிதாபமான தகப்பனாரும் தாயாரும்"

என்றாள், இரண்டாம் நாள், “அவர்கள் இங்கே வெளியே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் காண பரிதாபமாய் உள்ளது. அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள்; நீர் அங்கே போக வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்” என்றாள்.

நான், “சகோதரி ஐசக்ஸன், என்னால் எதுவும் செய்ய முடியாது. தேவன் முதலில் எனக்குக் காண்பிக்க வேண்டும். நான் அந்த பிள்ளைக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேன்” என்றேன்.

“நீங்கள் சற்று வெளியே வந்து அவர்களிடம் பேசுவீர்களா?” என்றாள்.

எனவே அவர்கள் அந்த கூடத்திற்கு (hall) அவர்களை அழைத்துக்கொண்டு வந்தனர். சிறு பரிதாபமான தாய், அவள்

ஓடி வந்து, “ஓ, சென்று, என் குழந்தையை சுகப்படுத்துங்கள்” என்று கூறினாள். நிச்சயமாகவே மொழிபெயர்ப்பாளர் மூலமாக; அவள் ஆங்கிலத்தில் பேசவில்லை.

நான், “சகோதரியே, என்னால் உன்னுடைய பிள்ளையை சுகப்படுத்த முடியாது” என்றேன்.

“நல்லது, மற்றொரு சிறிய பையன் மரித்து விட்டபிறகு அவர்கள் அவனை எழுப்பினர், உம்மால் என் சிறுபிள்ளையை சுகப்படுத்த முடியும்; அவன் மரித்துக்கொண்டிருக்கிறான்” என்றாள்.

நான், “இல்லை, பெருமாட்டியே (ma'am), நான் என்னுடைய தாய்நாடான அமெரிக்காவில் இருந்தபோது, இரண்டு வருடங்களுக்கு முன்னால் அந்தப்

பையன் எங்கே விழுந்து கிடப்பான் என்றும், அவனுடைய தோற்றம் எவ்வாறிருக்கும் என்றும், அச்சிறுவன் எவ்விதம் இருப்பான் என்றும் சொல்லி அந்த தரிசனத்தை தேவன் காண்பித்தார்" என்றேன். உங்களில் அனேகர் அதை *சுகமளித்தலின் சத்தம்* பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள், இல்லையா? அது *சுகமளித்தலின் சத்தம்* பத்திரிகையில் இருக்கும் என்று நான் உங்களிடம் கூறுகிறேன், அது - அதுதான்.

27. பிறகு, அச்சிறு ஏழை தாய்க்காக, நான் அவளுக்காக மிகவும் வருந்தினேன். அவள் சொன்னாள்... நான், "அது ஒரு தரிசனம்" என்றேன்.

அவளோ, "நல்லது, நீர் போய் என் சிறு மகனுக்காக தரிசனத்தைக் காண வேண்டும்" என்றாள்.

நல்லது, அது இனிமையானதாக இருக்கலாம், ஆனால் நீங்கள் விரும்பும் நேரத்திலோ, உங்களுடைய ஓய்வு நேரத்திலோ தரிசனங்களை உங்களால் காண முடியாது. அது தேவனுடைய தெய்வீக ஒழுங்கு, நான் விரும்புவதல்ல, ஆனால் அவர் விரும்புவது. இப்பொழுது, பிறகு இப்படித்தான் அது சம்பவித்தது.

நான், “நீங்கள் கிறிஸ்தவர்களா?” என்றேன்.

“இல்லை.”

நான், “கவனியுங்கள், மருத்துவர் சொன்னபடி, உங்களுடைய சிறு மகன் ஒருக்கால் மரித்துக்கொண்டிருக்கலாம். அவன் (மரித்தால்) மேலே பரலோகத்திற்கு செல்வான், ஏனென்றால் அவன் ஒரு சிறு பையனாயிருக்கிறான்”

என்றேன், ஏறக்குறைய ஆறு, ஏழு வயதிருக்கும். நான், "அவனுக்கு - அவனுக்கு இன்னும் பாவமென்றால் என்னவென்றே தெரியாது, அவன் மேலே பரலோகத்திற்குச் செல்வான். நீ உன்னுடைய பாவங்களில் மரிப்பாயானால், நீ ஒருபோதும் இனி அவனுடன் இருக்க முடியாது. நீ இரட்சிக்கப்பட்டு, சிறு பையனும் மரித்து பரலோகத்திற்குச் செல்வான் என்றால், நீ, நீயும் மரிக்கும் போது, மேலே பரலோகத்திற்கு செல்வாய்; நீ அவனுடன் எப்போதும் இருப்பாய், அது விபத்துக்கள் இல்லாத இடம். ஒருவேளை, என்னிடமிருந்து அனுகூலத்தை நீ விரும்பினால், எனக்காக நீ ஏதோவொன்றை செய்யவேண்டும், அன்பான ஏதோவொன்று. நீ தேவனிடம் ஒரு

அனுகூலத்தை விரும்பினால், அன்பான (kind) ஏதோவொன்றை செய்" என்றேன்.

எனவே அவர்களால் அதைத் தவற விட்டு விட முடியாது என்பதை அவள் கண்டு கொண்டாள், எனவே அவர்கள் முழங்கால்படியிட்டு, அழத்தொடங்கி, ஜெபித்து, தங்களுடைய இருதயங்களை கிறிஸ்துவுக்கு கொடுத்தனர். அவர்கள் எழுந்தனர்; பிறகு அந்தச் சிறிய ஏழை தாயானவள், "இப்பொழுது, நீர் உள்ளே போய், என் சிறு மகனுக்காக தரிசனம் காண வேண்டும்" என்றாள்.

நான், "நான் போய் ஜெபிக்கிறேன்" என்றேன்.

அவள், "மருத்துவமனைக்கு போகும்படி வர வேண்டும்" என்றாள்.

நான், "இல்லை, அவர் அங்கே எனக்குக் காண்பிக்கும் அதே

விதமாகவே, அப்படியே என் அறையிலும் அவரால் எனக்குக் காண்பிக்க முடியும். அவர் ஒருக்கால் எனக்கு காண்பிக்காமலும் இருக்கலாம்” என்றேன்.

எனவே இறுதியாக திருமதி.ஐசக்ஸன் அவர்களைப் போகச் செய்தாள். அவர்கள், “சகோதரன் பிரான்ஹாம் இப்பொழுது தரிசனம் கண்டாரா?” என்று சில நிமிடங்களுக்கொருமுறை திரும்ப திரும்ப தொலைபேசியில் அழைத்துக்கொண்டே இருந்தனர். அவர்கள் தங்களுடைய சிறு பையனின் (சுகமாக்குதலில் - தமிழாக்கியோன்) ஆர்வமாயிருந்தனர். ஏனெனில் சுகமடையப்போவதில்லை என்று மருத்துவர் கூறியிருந்தார், இது மூன்றாம் நாள்.

28. நாங்கள் அவ்விரவு அந்த அரங்கத்திலிருந்து அப்போது தான் வந்திருந்தோம். ஓ, நான் இந்த இதே வேதாகமத்தை மார்பில் அணைத்தவாறு ஜன்னலருகில் நின்று கொண்டிருந்தேன்; நான் ஜன்னல் பக்கமாகச் சென்றேன்; வருடத்தின் அந்த சமயத்தில் அங்கே அது இருளாயிருக்கவில்லை. அங்கே பின்லாந்து இராணுவவீரர்களும், இராணுவத்தை சார்ந்திராத அதிகாரிகளும் (civilians) ஒருவர் மற்றவருடன் பேசிக்கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தனர், உங்களுக்குத் தெரியும், ஒருவேளை கூட்டத்தைக்குறித்து பேசியிருக்கலாம், ஏனென்றால் அவர்கள் அனைவரும் அந்த அரங்கத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தனர். அங்கேயுள்ள முழு தேசத்தாரும் ஜனங்களோடு

வேலை செய்து கொண்டே ஜீவனம் பண்ணிக் கொண்டிருந்தனர்.

நான் ஒரு மேசை மேல் என் வேதாகமத்தை வைத்தேன். என் சகோதரனாகிய ஹவார்டு வந்திருந்தார். அவர் சென்ற முறை இங்கே நம்மோடு இருந்தார் என்பது உங்களில் அனேகருக்கு நினைவிருக்கும். இப்பொழுது இங்கே கனடாவை சேர்ந்த ஜனங்கள் யாராவது இருப்பார்களாயின், உங்கள் தேசத்தை எந்தவிதத்திலும் குற்றப்படுத்த இதைக் கூற வேண்டும் என்று கருதவில்லை. பாருங்கள்? நாங்கள் கனடாவில் இருந்தபோது கொஞ்சம் இனிப்பு ஆகாரத்தைப் (candy) பெற்றோம், ஓ, என்னே, அது, அதில் வைக்கும்படியாக அமெரிக்க ஜனங்களிடமுள்ள காரியம் அவர்களிடம் கிடையாது. இப்பொழுது, அது... அது

ஒருவகையான சுமாரான ருசியை உடையதாயிருந்தது (flat tasting). அவர், “கனடாவிலுள்ள இனிப்பு ஆகாரம் (candy) சுமாரான (சுவையுடன்) இருப்பதைக் குறித்து நீர் பேசுகிறீரே, இதை சுவைத்துப் பாரும்” என்றார். அவர் எனக்கு இரண்டு சிறு இனிப்புத் துண்டுகளைக் கொடுத்தார். நான் அதை அப்படியே மேசை மேல் வைத்து விட்டு, அங்கே நடந்து சென்றேன்.

நான் இதைப்போன்று என் கரங்களை மேலே உயர்த்தி, “ஓ, மகத்தான யேகோவா, நீர் எவ்வளவு அற்புதமானவர், ஆச்சரியமானவர் (wonderful)” என்றேன். அவர் அவ்விரவு, யுத்தத்தில் அனாதையான அந்தச் சிறுமியை சுகமாக்கினார், நீங்கள் அறிவீர்கள், அவள் ஊனமுற்றவளாயிருந்தாள், நான் சென்ற

இரவு உங்களிடம் கூறினபடி, அவளுடைய ஒரு கால் மற்ற காலை விடவும், சுமார் ஆறு அங்குலங்கள் குட்டையாயிருந்தது. அவளுடைய படத்தை நீங்கள், *சுகமளித்தலின் சத்தம்* பத்திரிகையில் கண்டிருக்கிறீர்கள், எப்படி அவளால் அவர்களோடு போக முடியவில்லை, அவள் போரில் அனாதையான சிறுமி. அவளைச் சுகமாக்கினதற்காக நான் தேவனுக்கு நன்றி கூறிக்கொண்டிருந்தேன்.

29. மேலும் அங்கே நின்றுகொண்டிருந்த போது, வினோதமான ஏதோவொன்றை உணர்ந்தேன்; நான் நோக்கிப் பார்த்த போது, இதோ அங்கே **அவர்** என்னுடைய பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு அழகான மலர் குவளையை (vase) தன்னுடைய

கரத்தில் வைத்திருந்தார். நான் அதை ஒரு மலர் குவளை (vase) என்று அழைக்கிறேன். எனக்கு அதிகம் தெரியாது; அது ஒருவகையான நீண்ட உயரமான காரியமாக இருந்தது. மேலும் அதனுள்ளே இரண்டு அமெரிக்க மலர்கள் இருந்தன, நான் ஈஸ்டர் மலர்கள் என்று அழைக்கிறதும், இள மஞ்சள் நிறமாக தோற்றமளிக்கிற பூக்களுமாக அவை இருந்தன. நான்... நாங்கள் இந்தியானாவிலும் கென்டக்கியிலும் அவைகளை ஈஸ்டர் மலர்கள் என்று தான் அழைக்கிறோம்; நான்... ஒருக்கால் இங்கே வித்தியாசமான பெயராக இருக்கலாம், ஆனால் அவைகள் ஒருவகையாக காண்பதற்கு மஞ்சள் நிற மலர்களாகும், அவைகள் ஏறக்குறைய ஈஸ்டரின் போது பூக்கின்றன.

அவர் வைத்திருந்த இந்தச் சிறு குவளையில் அவைகள் (மலர்கள்) இருந்தன, இந்தச் சிறு காரியத்தில் அவைகள் இருந்தன. அவர் அதை இதோ மேசையின் மேல் வைத்தார். அந்தச் சிறு ஈஸ்டர் மலர்களில் ஒன்று வடக்கு நோக்கி சாய்ந்திருந்தது, அது முழுவதுமாக கீழ் நோக்கிய விதமாக கிடந்தது, மற்றொன்று வாடி வதங்கிக் கிடந்தது.

30. அவர் என்னை நோக்கிப் பார்த்தார், அவர் உயரமான பெரிய மனிதராய், சுமார் 200 பவுண்டுகள் எடையுள்ளவராய் கருமையான தலை மயிர் தம்முடைய தோள்களில் கொண்டவராய், ஒருவிதமான பொன் பழுப்பு நிற முகத்தோற்றம் (Olive complexion) கொண்டவராய் இருந்தார், அவர் எப்போதுமே தம்முடைய

கரங்களை மடக்கினவராய் எப்பொழுதும் வலது பக்கத்திலிருந்து என்னிடம் வருகிறார். நான் ஒரு சின்னஞ்சிறிய குழந்தையாய் இருந்தது முதற்கொண்டே அவர் வருகிறார். கென்டக்கியில் உள்ள ஒரு சிறு மரக்கொட்டிலில் (log cabin) அவர் முதலாவதாக எனக்கு தோன்றின போது எனக்கு வெறுமனே ஒரு சில நிமிடங்கள் தான் வயதாகியிருந்து.

அவர் அங்கே நின்று கொண்டிருந்தார்; அவர் அந்த... இந்தச் சிறு காரியத்தை அங்கே கீழே வைத்துவிட்டு, என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார். நான் அதைப் பாார்த்தேன், அவர், "உன்னுடைய சகோதரன் உன்னிடம் என்ன கொடுத்தான்?" என்றார்.

நான், "ஐயா, இரண்டு இனிப்புத் துண்டுகள்" என்றேன்.

அவர், "அவைகளை சாப்பிடு" என்றார்.

நான் அந்த இனிப்புத் துண்டுகளில் ஒன்றை எடுத்து, புசிக்கத் தொடங்கினேன், அது இனிப்பான நல்ல சுவையாக இருந்தது, நான் அதை விழுங்கி விட்டேன். நான் அவ்வாறு செய்த போது, வடக்கு நோக்கி சாய்ந்திருந்த அந்த ஈஸ்டர் மலரானது அப்படியே மிகச்சரியாக பூகோளரீதியாக முதல் பையனை கார் இடித்த போது அவன் விழுந்த இடமாகிய வடக்கு நோக்கி சாய்ந்தது, மற்ற பையன் தெற்கு நோக்கி சென்று, முகவாய்க்கட்டையின் கீழாக அவனுக்கு அடிபட்டு, அவன் ஒரு மரத்தின் மேல் மோதினான். மற்ற பையனின் மேல் கார் ஏறி, அவன் காருக்கு கீழாக கூழாக்கப்பட்டு மரித்துப் போனான். அவன் உயிரடைந்து, பிறகு

பள்ளிக்குத் திரும்பினான்; இந்தச் சிறுவனோ இன்னும் மருத்துவமனையிலேயே இருந்தான், நாங்கள் அவனிடம் போகவில்லை.

31. எனவே, அந்தவொன்று அவ்விதமாகவே கிடந்தது, நான் முதலாவது துண்டை சாப்பிட்டபோது, அது "வியூ!"வென்று சரியாக நேராக மேலே எழுந்தது.

அவர், "இரண்டாவது துண்டை புசி" என்றார்.

நான் அந்த துண்டை எடுத்து (புசித்தேன்), ஓ, என்ன ஒரு மோசமான சுவை. (சகோதரன் பிரன்ஹாம் துப்புவது போன்ற சத்தத்தை ஏற்படுத்துகிறார் - ஆசிரியர்) நான் *இதைப்* போன்று அதை வெளியே துப்பிவிட்டேன், அந்த

மலரானது, “டஃப், டஃப், டஃப்” என்று போகத் துவங்கி கீழ் நோக்கிப் போனது.

“தோல்வி, அந்தப் பையன் மரித்து விடுவான்” என்றார்.

நான் அதைத் திரும்பவும் என் வாயில் வைத்து, மிக வேகமாக மென்று அதை விழுங்கி விட்டேன். நான் அதைச் செய்தபோது “டஃப்” என்று போய் மற்றதுடன் சரியாக நிமிர்ந்து நேராக நின்றது. அவர் என்னை நோக்கிப் பார்த்தார், நீங்கள் படத்தில் காண்கிற அந்த ஒளிவட்டம் கீழிறங்கி அவர் இருந்த இடத்தில் வந்தது; அவர் மேலே அந்த ஒளியினுள் சென்று போய்விட்டார்.

32. சகோதரன் பாக்ஸ்டரும் என்னுடைய சகோதரன் ஹாவர்டும் தங்களுடைய அறைக்குள் சென்றிருந்தனர். சகோதரன் லின்ட்சேயும்

சகோ.மூரும் தங்களுடைய அறைக்குள் சென்றிருந்தனர், சகோதரி ஜசக்ஸன் தன்னுடைய அறைக்கும், நான் என் அறைக்கும் போயிருந்தேன். நான் வெளியே ஓடி வந்து, (அவர்களைக்) கூப்பிட்டு, நான், "இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை நினைவில் கொள்ளுங்கள், அந்தப் பிள்ளை, மருத்துவமனையில் மரித்துக்கொண்டிருக்கும் பிள்ளை பிழைக்கப் போகிறான். அவளைக் கூப்பிட்டு அவளிடம் சொல்லுங்கள்" என்றேன்.

எனவே அப்போது, அங்கே அவர்களிடம் இருக்கிற தொலைபேசிகள், அது ஒரு சின்னஞ்சிறிய காரியமாக இருக்கிறது, அதை ஒரு விதமாக உங்கள் காதில் வைத்து, ஒரு சிறு வளைவான அச்சை (crank) சுழற்ற வேண்டும்.

அவள் அந்த வீட்டை அழைத்தாள், திருமதி ஐசக்ஸன் அதை செய்தாள்; ஜனங்கள் மருத்துமனைக்கு அழைக்கப்பட்டிருந்தனர், பிள்ளை அமிழ்ந்து கொண்டும் மரித்துக்கொண்டும் இருந்தான். அவர்களுடைய மற்ற பிள்ளைகளுடன் (இருக்கும்படி), பெற்றோர் வெளியில் செல்லும்போது பிள்ளையை கவனித்துக்கொள்ளும் ஒருவரை (babysitter) அவர்கள் வைத்திருந்தனர். பிள்ளையின் முடிவைக் காண அவர்கள் சென்றனர்.

அவர்கள்-அவர்கள் மருத்துவமனைக்கு போனில் கூப்பிட்ட போது, மருத்துவர் வந்து அந்த ஸ்திரீயை தொலைபேசியின் அருகில் அழைத்துச் சென்று, கர்த்தருடைய தூதன் இப்பொழுது தான் அறையில் தோன்றி,

“உன் பிள்ளை பிழைக்கப் போகிறான்” என்று கூறியுள்ளார் என்றார்.

“அது எனக்கு எவ்வளவு நன்றாகத் தெரியும். அதோ அவன் இப்பொழுதே குணமடைந்தவனாக உட்கார்ந்து கொண்டு, சரீரத்தைக் கழுவி, வீட்டிற்குப் போக ஆயத்தமாகி விட்டான்” என்றாள்.

அந்தப் பையன் இன்றும் பரிபூரணமாகவும், இயல்பாகவும், சுகமாகவும் பின்லாந்தில் ஜீவிக்கிறான், ஏனெனில் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒரு தாயின் ஜெபத்தைக் கனம் பண்ணினார். பாருங்கள்? நானல்ல. அது அந்த தாயாரின் ஜெபமாகும், அவளும், (பிள்ளையின்) தகப்பனாரும் தேவனை சேவிப்பதாக அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தனர்.

★★★★★

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 4

# மெம்ஃபிஸ் பெண்ணின் மகன் சுகமடைதல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: தியத்தீரா சபையின் காலம், டிசம்பர் 8, 1960, பத்தி எண் 157-213

சாட்டானூகா என்ற இடத்திலிருந்து ஓர் இரவு நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது நடந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. நான் பயணம் செய்த விமானம் டென்னஸியிலுள்ள மெம்ஃபிஸ் என்ற இடத்தில் தரையிறங்கியது. "இனி அடுத்த நாள் காலை ஏழு மணிக்குத்தான் உங்கள் விமானம் புறப்படும்" என்று என்னிடம் கூறி, அது வரைக்கிலும் நான் தங்கியிருப்பதற்காக எனக்கு ஒரு மிக அருமையான தங்கும் விடுதியை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

நான் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபடியால், எனது நண்பர்களுக்கு சில கடிதங்களை எழுதியிருந்தேன். அவைகளை அஞ்சலில் சேர்க்கத்தக்கதாக நான் ஹோட்டலை விட்டு வெளியே வந்து, அவைகளை அஞ்சல் பெட்டியில் போட்டேன். அவ்வாறு நான் நடந்து

கொண்டு செல்லுகையில் பரிசுத்த ஆவியானவர் என்னிடம், “நடந்து கொண்டேயிரு” என்றார். நான் தொடர்ந்து நடந்து கொண்டே சென்றிருந்தேன். அவ்வாறு நடந்து, கருப்பு இன மக்கள் வாழும் பகுதிக்குள் வந்துவிட்டேன்.

நான் அங்கே நின்று கொண்டு, எனக்குள், “என்னே! இங்கு பார். விமானம் புறப்பட நேரமாகிவிட்டதே” என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

பரிசுத்த ஆவியானவரோ, “தொடர்ந்து போய்க் கொண்டேயிரு” என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். அன்றொரு நாளில் அவர் காட்டில் “நடந்து கொண்டேயிரு” என்று சொன்னாரே, அதைப்போலவே இப்பொழுதும் சொன்னார். எனவே நான் நடந்து கொண்டே போனேன்.

அப்பொழுது நான் அங்கே உள்பகுதிக்குள் ஏழை கருப்பு இன மக்கள் வாழும் மிகச் சாதாரணமான சிறிய வீடுகளில் ஒன்றினைப் பார்க்க நேர்ந்தது. அதன் வாயிலில் ஜெமீமா என்னும் பெயருடைய ஒரு வயதான பெண்மணி. தன் தலையில் பையன்கள் அணியும் சட்டை

ஒன்றை தலையில் கட்டிக்கொண்டு சாய்ந்து கொண்டு நின்றிருக்கக் கண்டேன்.

நான் அங்கே இவ்வாறு பாடிக்கொண்டே போய் கொண்டிருந்தேன்.

*நானும் அவர்களில் ஒருவன், நானும் அவர்களில் ஒருவன்,*

*நானும் அவர்களில் ஒருவன் என்று கூறிட முடிந்ததால் நான் மிகவும் மகிழ்கிறேன்*

*ஓ அல்லேலுயா!* (“நீர் என்ன விரும்புகிறீர் கர்த்தாவே” என்று கேட்டேன்)

*அவர்களில் ஒருவன், நானும் அவர்களில் ஒருவன்*

> (ஆவியினால் நடத்தப்படுவதை நீங்களும் விசுவாசிக்கிறீர்களா? ஆம் நிச்சயமாக)
>
> *நானும் அவர்களில் ஒருவன் என்று கூறிட முடிந்ததால் நான் மிகவும் மகிழ்கிறேன்.*



இது நடந்தது 14 ஆண்டுகளுக்கு முன்பாக, அப்பெண்மணி வேலி ஓரமாக நின்று பார்த்துக்கொண்டே நின்றாள். நானோ தூரத்தில் வந்து கொண்டேயிருந்தேன். அந்த அம்மாள் என் மேலேயே கண்ணை வைத்து உற்று நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் பாடுவதை நிறுத்திவிட்டு, தொடர்ந்து நடந்து கொண்டே சென்றேன். அந்த அம்மையாரிடம் நான் நெருங்கி விட்டேன். அப்பொழுது அவள் பருத்த கன்னங்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

அவள் என்னை உற்றுநோக்கி, “காலை வணக்கம். போதகர் அவர்களே” என்றாள்.

நான் அந்த அம்மையாரை நோக்கி, “எப்படியிருக்கிறீர்கள், ஆன்ட்டி?” என்று கேட்டேன். என்னைப் பார்த்து மிகவும் சந்தோஷமாக புன்முறுவல் பூத்தாள். “நான் ஒரு பார்சன் என்று எப்படி அறிவீர்கள்?” என்று கேட்டேன். தெற்குப் பகுதியில், மக்கள் பிரசங்கியாரை “பார்சன்” என்று அழைக்கிறது வழக்கம், என்பதை நீங்கள் அறிவீர்கள். “நான் ஒரு பார்சன் (போதகர்) என்று எப்படி நீங்கள் அறிவீர்கள்?” என்று கேட்டேன்.

“நீங்கள் வரப்போகிறதாக முன்கூட்டியே நான் அறிந்து கொண்டேன்” என்று பதிலளித்தாள்.

“எப்படி அதை அறிவீர்கள்? என்னை உங்களுக்குத் தெரியுமா?” என்று நான் கேட்டேன்.

“தெரியாது, ஐயா, நீங்கள் வரப்போவது எனக்குத் தெரியும். சூனேமியாளைப் பற்றிய கதை உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டாள்.

“ஆம், தெரியும்” என்றேன்.

“நான் அந்தவிதமானதொரு பெண்மணிதான்” என்று கூறினாள். அவள் மேலும் கூறினாள்; “கர்த்தர் எனக்கு ஒரு பிள்ளையைக்கொடுத்தார், நான் அவனை சரியானபடி வளர்ப்பேன் என்று அவரிடம் கூறினேன். நான் ஒரு ஏழைப்பெண்மணி. ஜீவனத்திற்காக நான் வெள்ளை நிறத்தவருக்கு வீட்டு வேலைகள் செய்து கொடுக்கிறேன். ஆண்டவர் எனக்கு ஒரு பிள்ளையைக் கொடுப்பதாகச் சொன்னார். நான் அவரிடம், அவனை எனக்குத் தெரிந்த அளவுக்கு சிறப்பாக வளர்ப்பேன் என்று கூறினேன். அவ்வாறே நானும் அவனை எனக்குத் தெரிந்த அளவு சிறப்பாக வளர்த்து வரத்தான் செய்தேன். ஆனால் அவனோ, பார்சன் அவர்களே, தவறான கூட்டாளிகளோடு சேர்ந்துகொண்டு விட்டான். அவனுக்கு ஒரு வியாதியுண்டாயிற்று, அது அவனில் முற்றிப்போகிற வரைக்கிலும் நாங்கள் என்னவென்றே அறிந்து கொள்ள முடியவில்லை. அவன் இப்பொழுது அவன் படுக்கையில் மரித்துக்கொண்டிருக்கிறான். அவன் இப்பொழுது நினைவிழந்த நிலையில் உள்ளான். மருத்துவர்

வந்து பார்த்து, அவனை வியாதியானது அவனுடைய இருதயத்தைக் கூட தின்று விட்டது, அதில் இரத்தத்தோடு வேறு கலந்து விட்டது, அதனால் மிகுந்த பாதிப்பை அவனில் அது ஏற்படுத்திவிட்டது என்று சொல்லிப் போனார். அவர்கள் கொடுத்த மருந்து ஒன்றும் அவனுக்கு உதவி செய்யவில்லை. அவன் இப்பொழுது மரித்துக்கொண்டிருக்கிறான். அவன் ஒரு பாவியாக மரிப்பதை என்னால் காண சகிக்க முடியவில்லை. நான் மீண்டும் மீண்டும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். இரா முழுவதும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். கடந்த இரண்டு நாட்களாக அவன் சுய நினைவிழந்த நிலையில் காணப்படுகிறான். அவனைச் சுற்றி நடப்பதொன்றையும் அவன் அறியாத அளவுக்கு அவன் நினைவிழந்து இருக்கிறான்" என்று கூறினாள்.

அவள் மேலும் கூறினாள்: "நான் ஜெபித்தேன்; ஆண்டவரே நீர் அந்தக் குழந்தையை எனக்கு கொடுத்தீர், அந்த சூனேமியாளுக்குக் கொடுத்தது போல். எங்கே உமது எலியா? அவர் எங்கே

இருக்கிறார்? எனக்கு உதவி செய்யக்கூடிய ஒன்று எங்கேயுள்ளது?'' என்று.

“நான் முழங்காலில் நின்று ஜெபிக்கையில் உறக்கத்திலாழ்ந்தேன். அப்பொழுது கர்த்தர் என்னோடு சொப்பனத்தில் பேசினார். அவர் “நீ போய் வாசலருகே நின்று கொண்டிரு. அங்கே ஒரு மனிதன் தன் தலையில் பழுப்புநிற தொப்பியணிந்து மங்கல் நிறமுள்ள சூட் அணிந்தவராய் வீதியில் வருவார். அவர் உன்னிடம் பேசுவார்'' என்று என்னிடம் கூறியிருந்தார்.

“நான் விடியற்கால முதற்கொண்டு இங்கேயே காத்து நின்று கொண்டிருக்கிறேன்'' என்றாள். பனியினால் அவளது முதுகுப்பாகம் நனைந்திருந்தது. “நீங்கள் பழுப்புநிற தொப்பியணிந்து வருகிறதைக் கண்டேன். நீங்கள் ஒரு சிறிய பையைக் கூட உங்களுடன் கொண்டு வந்திருக்க வேண்டுமே'' என்று கேட்டாள்.

“நான் அதை எனது ஹோட்டலில் விட்டுவிட்டு வந்தேன்'' என்றேன். “உங்களுக்கு மகனுக்கு சுகமில்லையா?'' என்று கேட்டேன்.

“அவன் மரித்துக்கொண்டிருக்கிறான்” என்றாள் அவள்.

“என்னுடைய பெயர் பிரன்ஹாம் என்பதாம். என்னை உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டேன்.

“இல்லை ஐயா, பார்சன் பிரன்ஹாம் அவர்களே, நான் உங்களைப் பற்றி கேள்விப்பட்டதேயில்லை”.

“நான் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கிறதுண்டு” என்று மேலும் கூறினேன். அவளோ அதில் ஆர்வம் காட்டவில்லை. அவள் தன் மகன் பாவியாக மரித்துவிடக் கூடாதே என்பதைப் பற்றித்தான் கவலையாயிருந்தாள்.

நான் வாயிற்கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தேன். அக்கதவை திறந்த பிறகு அது தானே திரும்பப் போய் மூடிக்கொள்ளும், அவ்விதமான அமைப்பைக் கொண்டது அது.

வடக்கே உள்ளவர்களுக்கு அதைப்பற்றித் தெரியாது. இரண்டு அறைகளே கொண்ட ஒரு மிகச் சிறிய வீடாக அது இருந்தது. வரவேற்பறை, படுக்கை அறை எல்லாம் ஒரே இடத்திலேயே

இருந்தது, சமயலறை பின்னால் இருந்தது. நான் உள்ளே நுழைந்த போது.... சுவர்களில் வெள்ளையடிக்கப்பட்டிருந்தது. பக்கங்களில் மெல்லிய பலகைகளை வைத்து அடைக்கப்பட்டிருந்தது. கூரையில் தார் பூசப்பட்ட கனத்த அட்டையால் வேயப்பட்டிருந்தது. அது பனித்துளியினால் ஏற்பட்டதைப் போல், ஆங்காங்கே நீர்க்குமிழிகள் மேலே தொங்கிக்கொண்டிருந்தன.

நான் உள்ளே நுழைந்த பிறகு, கதவுக்கு அப்பால் உள்ளே சுவற்றில், “தேவன் எங்கள் இல்லத்தை ஆசீர்வதிப்பாராக” என்ற வாக்கியம் தொங்கிக்கொண்டு இருந்தது. இந்த மூலையில் ஒரு பழைய கட்டில் காணப்பட்டது, அந்தப் பக்கம் இன்னொரு கட்டிலும் காணப்பட்டது. அங்கே தான் ஒரு பெரிய உருவம் படுத்திருந்தது. (தரை விரிப்புக்கூட இல்லை). நல்ல தோற்றமுடைய கட்டுமஸ்தான ஒரு பையன் படுத்திருந்தான். அவன் ஏறத்தாழ ஆறடி உயரமும், 170 அல்லது 180 பவுண்டுகள் எடையுள்ளவனாகவும் இருந்தான் என்று கருதுகிறேன். அவனுடைய கையில் துப்பட்டியை

பிடித்துக் கொண்டிருந்தான். அவன் “ஊ, ஊ” என்று மெதுவாக முனகிக் கொண்டு இருந்தான்.

அவள், “அம்மாவின் குழந்தையே” என்று அவனை அழைத்தாள்.

“இவள், ‘அம்மாவின் அருமாந்தப் பிள்ளையே’ என அழைக்கிறாளே” என்று வியந்தேன். ஆயினும் அவன் சிபிலிஸ் என்னும் சமூக வியாதியினால் வருந்தி மரித்துக்கொண்டிருந்தான்.

அவள் அவனது நெற்றியில் முத்தமிட்டு, “அம்மாவின் மகனே” என்று அழைத்து அவனைத் தட்டிக் கொடுத்தாள்.

என்னுடைய இருதயம் பெரிதாக விரிவடைந்தது. “ஆம், நீ எவ்வளவு ஆழமாக பாவத்தில் ஆழ்ந்திருந்தாலும், நீ இன்னமும் அவளுடைய பையன்தான்” என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். பிறகு நான் எண்ணினேன்: “பார்த்தாயா, அவன் எவ்வளவு கெட்டவனாயிருந்தாலும் அக்கறையில்லை, அவன் அவனது தாய்க்கு இன்னமும் ‘அம்மாவின் குழந்தை’ தான். “தாய் தன் பிள்ளையை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை.

உன்னை என் உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறேன்'' என்று ஆண்டவர் கூறியதைப் பற்றி நான் எனக்குள் எண்ணிப் பார்த்துக்கொண்டேன். பாருங்கள்? எப்படி முடியும்?

அந்த வயதான பரிசுத்தவாட்டி அங்கே நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவளுடைய வீட்டில் ஒன்றுமே இல்லை என்பதை நீங்கள் பார்த்ததும் கண்டு கொள்ள முடியும். சகோதரனே, ஆனால் அவளிடம், அவளுடைய வீட்டில், ஒரு காரியம் இருந்தது. அது இண்டியானாவிலும் மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் கண்டிப்பாக இருக்க வேண்டிய ஒன்றாகும். அது தான் தேவன். அவள் வீட்டில் அவர் இருந்தார். ஆபாசமான, அருவருக்கத்தக்க, பாலுணர்வைத் தூண்டும்படி தோற்றமளிக்கும் பெண்களுடைய படங்கள் மாட்டப்பட்ட ஆடம்பரமான படாடோபமான வீடு ஒன்று எனக்கு இருப்பதைவிட, தேவனுடைய அப்படிப்பட்ட எளிய வீடு ஒன்றைப் பெற்றிருப்பதையே நான் விரும்புகிறேன். பழைய வேதாகமம் ஒன்று அங்கே திறந்து வைக்கப்பட்டிருந்தது அதின்

பக்கங்கள் உபயோகித்து கசங்கிப் போய் பழையதாகிப் போயிருந்தது.

நான் அவளை நோக்கிப் பார்த்தேன். அவள், ‘‘தேனே, பிரசங்கியார் உனக்காக ஜெபிக்க வந்திருக்கிறார்’’ என்றாள்.

அவன் தொடர்ந்து, ‘‘ஊ, ஹூ, இருட்டாயிருக்கிறது’’ என்று முனகிக்கொண்டேயிருந்தான்.

‘‘அவன் என்ன கூறுகிறான்?’’ என்று நான் கேட்டேன்.

‘‘அவன் கூறுவது என்னவென்று அவனுக்கே தெரியாது, மருத்துவர் அவன் தன் சுய புத்தியில் இல்லை என்று கூறிச் சென்றார். அவன் ஏதோ ஒரு கொந்தளிக்கும் ஆழ்கடலில் ஒரு படகை வலித்துக் கொண்டு போகையில், அவ்வலைகடலில் தான் சிக்கிக் கொண்டதுபோல் உணருகிறான். அதைத்தான் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை போதகரே. என் மகன் இழந்து போகப்பட்டவனாக, இரட்சிக்கப்படாமல் மரிக்கிறதை தான் என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை, நீங்கள் எனக்கு உதவி செய்ய வருவீர்கள் என்பதை நான் அறிவேன். ஏனெனில்

கர்த்தர் என்னிடம் அவ்வாறு கூறினார்'' என்று அவள் கூறினாள்.

“நான் அவனுக்காக ஜெபிப்பேன், ஒரு வேளை கர்த்தர் அவனை வியாதியிலிருந்து குணமாக்குவார்'' என்று நான் சொன்னேன்.

வியாதியிலிருந்து மகன் குணமடைய வேண்டுமென்பதைப் பற்றி அவள் சற்றேனும் அக்கறைப்படவில்லை. மகன் எழும்பி நின்று, தான் இரட்சிக்கப்பட்டதாகக் கூற வேண்டும் என்பதைப் பற்றித்தான் அவள் விருப்பங்கொண்டவளாய் இருந்தாள்.

அவ்வளவுதான், அவன் இரட்சிக்கப்பட வேண்டும். அவன் குணமடைந்தாலும், என்றாகிலும் ஒரு நாள் அவன் போகத்தான் வேண்டும். ஓ, அவ்விதமான ஒரு மனோநிலையை மட்டும் நான் கொண்டிருந்தால் அது எப்படியிருக்கும்! தூரத்தில் நித்திய வீடு ஒன்றுண்டு என்றும், மகன் இரட்சிக்கப்பட்டிருந்தால், அவன் மரித்துவிட்டாலும், தான் அங்கே

போகும்போது மீண்டும் அவனோடு வாழ்வோம் என்பதையும் அவள் அறிந்திருந்தாள்.

"அவன் 'இரட்சிக்கப்பட்டேன்' என்று சொல்வதை நான் கேட்க முடிந்தால் நல்லது" என்று அவள் கூறினாள்.

நான், "நாம் தலைவணங்கி ஜெபிப்போம்" என்றேன். அவள் முழங்கால்படியிட்டாள். நான் அவனது பாதங்களை பற்றிக் கொண்டேன். அவனது பாதங்கள் குளிர்ந்து போய் பிசுபிசு வென்று இருந்தது. அவன் மேல் மெல்லிய துப்பட்டியை அவனது தாய் போர்த்தியிருந்தாள். அவன் அரைக்கால் நிக்கரை அணிந்திருந்தபடியினால் துப்பட்டியை அகற்ற முடியவில்லை.

அவன் ஒரு படகில் இருந்துகொண்டு, படகை துடுப்பைக் கொண்டு வலிக்கிறது போல் எண்ணிக்கொண்டு அவ்வாறு கைகளை அசைத்துக்கொண்டிருந்தான். "இங்கு மிகவும் இருளாய் இருக்கிறது, ஊ ஊ மிகவும் இருளாய் இருக்கிறது" என்று அவன் சொல்லிக்

கொண்டேயிருந்தான். எனவே அவனது தாய் அவனிடம் பேச முயற்சித்துக் கொண்டிருந்தாள். அவனோ தொடந்து, “இங்கே இருட்டாகவும், குளிராகவும் இருக்கிறது” என்று சொல்லிக்கொண்டே படகு வலிக்கிறவனைப்போல் செய்து கொண்டேயிருந்தான்.

பின்பு நான் அவளை நோக்கி, “ஆன்ட்டி, நீங்கள் நம்மை ஜெபத்தில் நடத்துவீர்களா?” என்று கேட்டேன்.

அவளும், “சரி, ஐயா” என்றாள்.

அந்த அறையில், அந்தத் தாயாரும், நானும், அந்தப் பையனும், பரிசுத்த ஆவியானவரும் மட்டும்தான் இருந்தோம். அந்த வயதான பரிசுத்தவாட்டி ஜெபித்தாள். என்னே! அவள் ஆண்டவரிடம் பேசிய பொழுது, ஏற்கனவே அவரிடம் பேசியிருந்தது தெரியவந்தது. ஆம், ஐயா! தான் யாரிடம் பேசுகிறோம் என்பதை அவள் அறிந்தேயிருந்தாள். “ஆண்டவரே, நீர் என்ன செய்யப்போகிறீர் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் யாவும் நீர் முன்னுரைத்த படியே இருந்து கொண்டிருக்கிறது” என்று ஜெபித்தாள்.

ஓ, என்னே! ஆதியில் அப்பரிசுத்தவான்களுடன் இருந்த அதே இயேசு இப்பொழுதும் இருக்கிறார் என்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்கும் அதே இயேசுவாக அவர் இருக்கிறார்.

நான் அந்த அம்மாளை, அவள் பாப்டிஸ்ட்டா, அல்லது பெந்தெகோஸ்தேயினரா என்றெல்லாம் விசாரிக்கவில்லை. அது என்னுடைய வேலையாயிருக்கவில்லை. நான் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலை பின்பற்றிக் கொண்டிருந்தேன். அந்த அம்மையாரும் அதையே தான் செய்து கொண்டிருந்தாள். அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை நாங்கள் காண விரும்பினோம்.

எனவே நாங்கள் முழங்கால்படியிட்டோம். அந்த அம்மையார் ஜெபிக்க ஆரம்பித்தாள். அவள் ஜெபித்து முடிந்தபோது, எழும்பி, தன் மகனின் நெற்றியில் முத்தமிட்டு, "என் குழந்தையே, தேவன் உன்னை ஆசீர்வதிக்கக்கடவர்" என்றாள்.

"இப்பொழுது நீங்கள் ஜெபிப்பீர்களா, பிரசங்கியாரே" என்று என்னிடம் கேட்டாள்.

“சரி, அம்மா” என்றேன் நான். அப்பொழுது நேரம் எட்டரை மணியாகிவிட்டது. ஒரு வேளை ஒன்பது மணியாக இன்னும் கால்மணிநேரம் இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். விமான நிலையத்திற்கு இரண்டு மைல் தொலையில் நான் இருந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய விமானமோ 7 மணிக்கு புறப்பட்டிருக்க வேண்டும். எப்பொழுது அங்கிருந்து கிளம்பிச் செல்ல போகிறேன் என்பதும் எனக்குத் தெரியவில்லை.

எனவே, நான் என்னுடைய கைகளை அவனுடைய பாதங்களில் மேல் வைத்தேன். நான், “பரம பிதாவே, இது என்னவென்று எனக்குப் புரியவில்லை. ஏறத்தாழ ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பாக நான் விமானத்தில் ஏறிப்போயிருந்திருக்க வேண்டும். நீர் “தொடர்ந்து நடந்து செல்” என்றுக் கூறிக்கொண்டேயிருந்தீர். இது வரைக்கிலும் நான் இந்தக் காரியத்தைத் தான் கண்டிருக்கிறேன். நான் வருவதைக் குறித்து நீர் காண்பித்ததாகவும், நான் வருவதைக் கண்டதாகவும் அவள் கூறினாள். கர்த்தாவே, நீர்தான் அதைச் சொன்னீர் என்றால், எனக்கு என்ன செய்வதென்று தெரியாது. நான்

என்னுடைய கைகளை இந்தப் பையன் மேல் வைக்கிறேன்'' என்று ஜெபித்தேன்.

அந்தப் பையன் கூறினான். ''ஓ, அம்மா, இந்த இடத்தில் இப்பொழுது வெளிச்சம் பரவிக் கொண்டிருக்கிறது'' என்று. சுமார் ஐந்து நிமிடங்களுக்குள்ளாக படுக்கையின் மேல் பக்கத்தில் அவன் அமர்ந்து கொண்டு தன் தாயாரை தன் கைகளினால் அணைத்துக் கொண்டான்.

அப்பொழுது நான் அங்கிருந்து மெதுவாக நழுவி வெளியே வேகமாக வந்து, ஒரு வாடகை காரைப்பிடித்துக் கொண்டு ஹோட்டல் அறைக்கு வந்து எனது சூட்கேஸை எடுத்துக்கொண்டு, விமான நிலையத்திற்கு விரைந்தேன். நான் எனக்குள் நினைத்தேன், நான் அங்குபோய் அடுத்த விமானத்தைப் பிடிக்க இரண்டொரு நாட்கள் காத்திருக்க நேரிட்டு விடும் என்று. ஏனெனில் அந்நாட்களில் அவ்வாறான நிலைமை இருந்து வந்தது. உலக யுத்தம் முடிந்ததற்கு பிறகு, உடனே அக்காலத்தில் அங்கெல்லாம் ஒரு விமானத்தைப் பிடிக்க வேண்டுமென்றால் மிகவும் கடினமான காரியமாக இருந்தது என்பதை நீங்கள்

அறிவீர்கள். "நான் இரண்டு நாட்கள் காத்து இருக்க வேண்டியதாகுமோ" என்று எனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

நான் அங்கே போய்ச் சேர்ந்ததுமே, "ஃப்ளைட் எண்: 196 லூயிவில் கெண்டக்கிக்கு இப்பொழுது புறப்படப் போகிறது" என்று அறிவிப்பாளர் அறிவித்துக்கொண்டிருந்தார். அவ்வாறாக தேவன் அவ்விமானத்தை எனக்காக தாமதிக்க வைத்திருந்தார். ஓ, அதை நான் விசுவாசிக்கிறேன்.

அந்த சம்பவம் நடந்து இரண்டு ஆண்டுகள் கழித்து, நான் இரயில் வண்டியில் அரிஸோனாவுக்குப் போய்க் கொண்டிருந்தேன். சகோதரன் ஷாரிட் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்திற்காக நான் போய்க்கொண்டிருந்தேன். வழியில் நான் சகோதரன் மூர் மற்றும் ஏனையோரோடும் சேர்ந்து கொண்டேன். வழிப்பிரயாணத்தில் மெம்ஃபிஸில் இரயில் வண்டி நின்றது. மேற்கு நோக்கி செல்லும் வண்டிகள் எவ்வாறு அதற்கென உள்ள 'டர்ன் டேபிளில்' போய் சுற்றி திரும்பி நின்று கொள்ளும் என்பது உங்களுக்குத் தெரியும். (டர்ன்

டேபிள் – இரயில் வண்டிகள் வந்த திசையிலிருந்து திரும்பி வேறு ஒரு திசைக்குப் போவதற்காக வண்டிகளைத் திருப்பிவிடுவதற்காக வசதியதாக அமைக்கப்பட்டிருக்கும் வட்ட வடிவமான இரயில் பாதை – மொழி பெயர்ப்பாளர்). அதற்காகத்தான் மெம்பிஸில் வண்டி நின்றது.

சாண்ட்விச்சுகளை இரயிலில் வாங்கினால் ஒரு துண்டுக்கு 60 செண்டுகள் செலவிட வேண்டியிருக்கும். ஆனால் வெளியில் வாங்கினால் 10 அல்லது 15 செண்டுகள் தான் அதன் விலை. எனவே சாண்விட்சுகள் வாங்குவதற்கு வண்டி நிற்பதற்காக நான் காத்திருந்தேன். பையில் அரைவாசி அளவுக்கு ஹாம்பர்கள் வாங்கி, பயணத்தில் நிச்சயம் படு குஷியடைய எண்ணினேன். எனவே நான் வண்டி நின்றதும், வண்டியைவிட்டு குதித்து இறங்கி விரைவாக ஓடிப்போய் ஹாம்பர்கள் வாங்க கடைகளைத் தேடினேன். அங்கே வண்டி 30 நிமிடங்கள் நிற்கும்.

எனவே ஹாம்பர்கள் வாங்க நான் ஆரம்பித்தபோது யாரோ ஒருவன், "ஹெல்லோ,

இதோ அங்கே பார்சன் (பிரசங்கியார்) நின்று கொண்டிருக்கிறார்'' என்று கூறும் சத்தம் கேட்டது. நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். அங்கே சிவப்பு நிறத்தொப்பி வைத்த ஒருவன் நின்று கொண்டு கண்ணை சிமிட்டிக் கொண்டு என்னையே பார்த்து, ''உங்களுக்கு என்னைத் தெரியுமல்லவா?'' என்றான்.

''மகனே, நீ யார் என்று தெரியவில்லையே'' என்றேன்.

''வாருங்கள், வந்து என்னை நன்றாகப் பாருங்கள்'' என்றான் அவன்.

''உன்னை எனக்குத் தெரியும் என்பதை நான் நம்பவில்லை'' என்றேன்.

''உங்களை எனக்குத் தெரியும், நீங்கள் பிரசங்கியார் பிரன்ஹாம்'' என்று கூறினான்.

''ஆம், அது சரிதான். நீ எப்பொழுதாவது என்னுடைய கூட்டமொன்றில் கலந்து கொண்டிருக்கிறாயா?'' என்று கேட்டேன்.

''இல்லை ஐயா. நீங்கள் ஒரு நாள் காலையில் எங்கள் வீட்டிற்கு வந்தீர்களே. என் தாயார் கூட....'' என்றான் அவன்.

"ஓ, அந்தப் பையனாக நீ இருக்க முடியாது" என்றேன்.

ஆம் ஐயா, நான்தான் அவன், நான் தான் அவன். போதகரே, நான் சுகமானேன். நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். அது மாத்திரமல்ல, நான் இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாகவும் ஆகியிருக்கிறேன்" என்று கூறினான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

★★★★★

# கெண்டக்கியில் எண்ணெய் கண்டுபிடிப்பதைப் பற்றிய தரிசனம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 58-68

அண்மையில் ஒரு கூட்டம் பேர் என்னிடம் வந்து கூறினார் - அவர்களில் சிலர் இன்றிரவு கேட்டுக் கொண்டிருக்கின்றனர்..... அவர்களிடம் நான், "கென்டகிக்குச் செல்லுங்கள், அங்கு எண்ணெய் உள்ளது" என்று கூறிக்கொண்டேயிருந்தேன், அங்கு எண்ணெய் உள்ளதென்று எனக்குத் தெரியும். அதை நான் தரிசனத்தில் கண்டேன்.

நல்லது, சகோ. டீமாஸும் மற்றவர்களும் நீண்ட காலமாக செல்லவேயில்லை. பிறகு, முடிவில்,

அவர்கள்... (டெக்ஸாஸ் நிர்வாகம் அங்கு சென்ற பின்பு)... அவர்கள், “இப்பொழுது நாங்கள் போகிறோம்” என்றனர்.

நான், “நீங்கள் நீண்ட காலத்துக்கு முன்பே சென்றிருக்க வேண்டும்” என்றேன். அவர்கள் அப்படி செய்யவில்லை.

டீமாஸ், “சகோ. பிரான்ஹாமே, அப்படி செய்யாததனால் பெருந்தவறு செய்து விட்டேன்” என்றார்.

“நீங்கள் அப்பொழுதே போயிருந்தால், எல்லாவற்றையும் பெற்றிருப்பீர்கள்” என்றேன்.

அவர்கள் அதற்கு செவிக்கொடுக்கவில்லை, முதலாவதாக... அன்றிரவு நாங்கள் அவ்விடம் விட்டுச்செல்லும் முன்பு (நாங்கள் பகல் உணவு அருந்தின இடம்), பரிசுத்த

ஆவியானவர் பூமியில் ஒரு பெரிய பிளவை எனக்குக் காண்பித்தார். அதில் எண்ணெய் நிறைந்திருந்தது. கெண்டக்கியில் மேலே வந்து கொண்டிருப்பது எண்ணெய் உள்ள சிறு படிவங்கள். அதிலிருந்து அவர்கள் 'பம்ப்' செய்து எண்ணெய் எடுக்கின்றனர். ஆனால் இதுவோ மூல ஊற்றிலிருந்து வந்த எண்ணெய். நான், "சகோ. டீமாஸ். அது அங்குள்ளது" என்றேன்.

அவர்கள் அதை தேடிக்கொண்டு சென்றனர். அவர்கள் "அங்கு சென்று, எண்ணெய் கிணறு எங்கே உள்ளது என்று எங்களுக்கு சொல்லும்" என்றனர்.

நான், "ஓ, முடியாது! முடியாது! முடியாது!" என்றேன்.

பாருங்கள், தேவனுடைய வரத்தை நாம் வர்த்தகத்துக்காக உபயோகிப்பதில்லை. இல்லை! இல்லை!

அது எங்குள்ளதென்று அவரால் என்னிடம் கூறமுடியும். ஆனால் அது எனக்கு தேவையில்லை. அவரைக் கேட்பதற்கு கூட எனக்கு போதிய விசுவாசம் இராது. பாருங்கள்? அது எனக்குத் தேவையாயிருக்குமானால், அவரை நான் கேட்டால், அவர் என்னிடம் கூறுவார் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. ஆனால் முதலாவதாக, பாருங்கள், உங்கள் நோக்கங்களும் குறிக்கோள்களும் சரியாயிருக்க வேண்டும். அதற்கு காரணங்களை நீங்கள் உடையவர்களாயிருக்க வேண்டும். நீங்கள் கேட்பதனால் தேவன் அதை உங்களுக்கு கொடுக்க மாட்டார். அதற்கான உண்மையான நோக்கம் இல்லாமல், அது தேவனுடைய சித்தத்தின்படி இல்லாமல், உங்களால் விசுவாசித்து கேட்க முடியாது. எனவே நீங்கள் சுகமாயிருக்க

வேண்டுமென்றால், எதற்காக நீங்கள் சுகமாயிருக்க வேண்டும்? நீங்கள் சுகமாக்கப்பட வேண்டும் என்றால், நீங்கள் சுகமாக்கப்பட வேண்டுமென்று விரும்பும் காரணம் என்ன? நீங்கள் தேவனிடம் என்ன கூறுகின்றீர்கள்? நீங்கள் சுகமடைந்த பின்பு, உங்கள் வாழ்க்கையை குறித்து என்ன செய்யலாம் என்றிருக்கிறீர்கள்? பாருங்கள்... நீங்கள் ஒரு நோக்கத்தையும் குறிக்கோளையும் உடையவர்களாயிருக்க வேண்டும். அவை தேவனுடைய சித்தத்தின்படி சரியாயிருக்க வேண்டும். பிறகு அந்த விசுவாசம் உங்களுக்கு வெளிப்படுமானால், தேவன் தம்முடைய இராஜாதிபத்திய கிருபையினால் அந்த விசுவாசத்தை அங்கு வைக்கிறார். பிறகு எல்லாம் முடிவு பெறுகிறது. பாருங்கள்? இப்பொழுது பார்த்தீர்களா?

அந்த வார்த்தை உண்மையென்று காண்பிக்க, அந்த சகோதரர் அங்கு சென்றபோது, அவர்கள் வாங்கினர்... ஒருவர் அங்கு சென்று சில இடங்களை வாங்கி, அவைகளை குத்தகைக்கு விற்று, மற்றவரை இப்படி ஏமாற்றினார். நான், "பாருங்கள், அது நடக்காது" என்றேன். ஆனால் தீர்க்கதரிசனத்தை உறுதியாக்க இந்த மனிதர்கள், தோண்டிக் கொண்டிருந்த கிணற்றிலிருந்து நூறு கெஜம் தூரத்திற்குள் வேறு மனிதர்கள் பீச்சிக் கொண்டு வெளிவரும் ஒரு பெரிய எண்ணெய் ஊற்றை கண்டுபிடித்தனர். அது அங்குள்ளது, அரை நாளில் அது ஆயிரத்து நூறு பீப்பாய் எண்ணெய் தருகின்றது – அது போன்று எத்தனையோ பீப்பாய்கள். அது இன்னமும் தந்து கொண்டிருக்கிறது, அந்த மூல ஊற்றிலிருந்து. அந்த தீர்க்க தரிசனம் –

அது அங்குள்ளது என்று கூறப்பட்ட அந்த வார்த்தையின் படியே, அது அங்கிருந்தது. மற்ற கிணறுகள் அனைத்துமே, கென்டக்கியில் எல்லாவிடங்களிலும் உலர்ந்துவிட்டன. அவை சிறு குளங்கள். அவர்கள் சிறிது காலம் 'பம்ப்' செய்து எண்ணெய் எடுத்தவுடன் அவை போய்விடுகின்றன. அவை மூல ஊற்றிலிருந்து வெளியே ஊற்றப்படுபவை (Overflows). பாருங்கள்?

சுயநலம் அவர்கள் மத்தியில் நுழைந்த காரணத்தால், அவர்களுடைய குறிக்கோள்கள் தவறாகிவிட்டன. "அது இப்படித்தான் இருக்கும்" என்று எண்ணி, அவர்கள் கையொப்பமிட்டு சில இடங்களை குத்தகைக்கு எடுத்தனர். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்காக செய்வதாக வாக்களித்தபோதிலும், அது

அவர்களுக்காகவே என்பது போல் காணப்பட்டது. பாருங்கள்?

★★★★★

# கொடூரமான வேட்டைக்காரன் இரட்சிக்கப்படுதல்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: சாலொமோனிலும் பெரியவர் இப்பொழுது இங்கே இருக்கிறார்

Dallas, Texas, USA

64-03-06

---

நியூயார்க்கிலுள்ள இல்லை நியூ ஹாம்ப்ஷயரிலுள்ள ஒருவனுடன் நான் வேட்டையாடுவது வழக்கம். அவன் சிறந்த வேட்டைக்காரன். அவன் பெயர் பெர்ட் (Bert). அவன் இங்கிலாந்து நாட்டுக்காரன். அவன் பெற்றோர் முன் காலத்தில்

’ஜெபர்ஸன்நாட்ச்’ என்னும் இடத்தை பாறையில் வெட்டினர் – அங்கிருந்து ’காரல் நாட்ச்’ வரைக்கும் வெட்டியெடுத்து அதை பிரித்தனர்.



அவனுடைய உடலில் சிறிது இந்திய இரத்தமும் இருந்தது, நான் கண்டதிலேயே அவன் மிகவும் சிறப்பாக குறிவைத்து கூடுபவன்,

மிகச் சிறந்த வேட்டைக்காரர்களில் ஒருவன். நீங்கள் அவனுடன் கூடசென்று அவனைத் தேட வேண்டுமெனும் அவசியமேயிராது. அவன் எங்கிருக்கிறான் என்பதை நன்கு அறிந்திருந்தான்.



வெள்ளை வால் மானைவேட்டையாட எனக்கதிக பிரியம். அவர்கள்... நான் ஒவ்வொரு இலையுதிர் காலத்தின் போதும் சென்று வேட்டையாடுவது வழக்கம்.



68 அவன் சிறந்த வேட்டைக்காரன், ஆனால் மிகவும்

கொடியவன். என் வாழ்க்கையில் அப்படிப்பட்டவனை நான் சந்தித்ததேயில்லை. அவனுக்கு பல்லிக்கு இருப்பது போன்ற கண்கள் இருந்தன– இன்றைய பெண்கள் பல்லியின் கண்களைப்போன்று தங்கள் கண்களை வர்ணம் அடித்துக்கொள்வது போன்ற அத்தகைய கண்கள். அவனுக்கு இயற்கையாகவே அப்படிப்பட்ட கண்கள் இருந்தன. அதுமனித கண்களைப்போல் எனக்குத் தோன்றவில்லை. எனவே அவனைப் பார்க்கவே எனக்கு வெறுப்பாயிருந்தது. அவன் வழுவழுப்பான தோற்றம்

உடையவனாயிருந்தான் – அவனுக்கு பக்க பார்வை இருந்தது.



அவன் நீசமாயிருப்பதில் பிரியம் கொள்வான். எனக்கு வருத்தம் உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே அவன் மான்

குட்டிகளைக் கொல்லுவான். அவன், “ஓ, போதகரே, நீரும் மற்றவர்களைப் போலவே இருக்கிறீர். உமக்கு கோழிக்குஞ்சு இருதயம் போல இளகியமனதுள்ளது. நீர் போதகராயிராமல் இருந்தால், நல்ல வேட்டைக்காரனாயிருந்திருப்பீர்” என்பான்.



நான் அவனிடம், ”பெர்ட், நான் ஆத்துமாக்களை வேட்டையாடுபவன்.

உன் ஆத்துமா இழந்துபோன நிலையில் உள்ளது" என்பேன்.

அவன், "ஆ, சும்மாயிரும். பில்லி, அப்படிப்பட்ட ஒன்றை என்னிடம் கூற வேண்டாம்' என்பான். அவன் மான் குட்டிகளை சுட்டுக் கொல்வான். அது எனக்கு வருத்தத்தை விளைவிக்கும்.



69 சட்டம் மான் குட்டியைக் கொல்லலாம் என்று கூறி

யிருக்குமானால், அதைக் கொல்வதனால் தவறொன்று மில்லை. நான் அநேக ஆண்டுகளாகவேட்டை அதிகாரியாக பணியாற்றியிருக்கிறேன். பாருங்கள், ஆபிரகாம் ஒரு கன்றுக்குட்டியைக் கொன்று தேவனுக்கு உண்ணக்கொடுத்தான். எனவே ஒரு மான் குட்டியைக் கொல்வதில் தவறொன்றுமில்லை சட்டம் அதை அனுமதிக்குமானால். ஆனால் அதை சுட்டுவீழ்த்தி விட்டு, அது அங்கேயே கிடக்கும்படி செய்து, அதைக் குறித்து பெருமையடித்துக் கொள்வதென்பது மிகவும் தவறாகும். அப்படி செய்வது தவறு. இங்குள்ள வேட்டையாடும் என்

சகோதரர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதை கூறினேன்.



இதைக் கவனியுங்கள். இந்த மனிதன். ஒரு நாள் நான் அங்கு சென்றிருந்தேன், என் மனைவியும் என் கூட வந்திருந்தாள். அவன் மான்குட்டி அழுவது போல

சத்தமுண்டாக்கும் ஒரு ஊதலை செய்து கொண்டுவந்திருந்தான் மான்குட்டி அழும்போது அது எப்படி வினோதமான சத்தம் உண்டாக்குமென்று உங்களுக்குத் தெரியும்.

70 நான் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் நேரத்தோடு வேட்டைக்குச் செல்லவில்லை, ஒரு கூட்டத்திலிருந்தேன். அதன் பிறகு வேட்டையாட அவனுடன் நான் மலையின்மேல் சென்றேன். ஏற்கனவே அதிகமாக வேட்டையாடுதல் நடந்து கொண்டிருந்தது. அங்கு முதன் முறையாக துப்பாக்கி சுடும் சத்தம்

கேட்கும்போது, அந்த வெள்ளை வால் மான்கள்... நீங்கள் ஹவுடினி மிருகங்களை மறைத்துவிடும் ஒரு பெரிய ஜாலவித்தைக்காரன் என்று கருதலாம். ஆனால் அவைகளுக்கு அவன் ஒரு கற்றுக்குட்டியே. முதலாவதாக என்ன நடக்குமென்றால், அவையெல்லாம் போய் ஒளிந்து கொள்ளும். நிலாவெளிச்சம் இருந்தால், அவை இரவில் புல்மேயும்; அல்லது ஒரு புதரின் மறைவில் இருந்து கொண்டு அசையாமல் இருக்கும்.

அன்று நான் அவனிடம், “பெர்ட், நீ அந்த ஊதலை உபயோகிக்கக் கூடாது” என்றேன்.

அவன், 'ஆ, போதகரே, நீர் மிகுந்த இளகியமனது கொண்டவர். பேசாமலிரும்" என்றான்.



71 நாங்கள் புறப்பட்டு சென்றோம். எங்கள் சட்டையில் சில 'சான்ட்விச்சுகளை போட்டுக்

கொண்டோம். நாங்கள் பகல் நேரம் வரைக்கும் வேட்டையாடுவதென்றும், 'பிரஸிடென்ஸியல் ரேஞ்ஜ்' மலையுச்சி வரை சென்ற அதன் பின்பு பிரிந்து கீழே வருவதென்றும் முடிவு செய்தோம். எங்களுக்கு ஒரு மான் கிடைத்தால், அது எங்கிருக்குமென்று எங்களுக்குத் தெரியும். நாங்கள் ஓரிரண்டு நாட்களில்அதை இழுத்துக் கொண்டுவந்து அதை தொங்கவிடுவோம் என்று எண்ணினோம்.

அங்கு நான்கு அல்லது ஆறு அங்குலம் உயரத்துக்கு பனி இருந்தது. பாதையில் நடந்து செல்வதற்கு அது நல்ல

நேரமாயிருந்தது. நாங்கள் புறப்பட்டு மலையின் மேல் ஏறினோம். ஒரு பாதையும் கூட தென்படவில்லை. இரவில் நிலா பிரகாசித்துக் கொண்டிருந்தது. மான்... (ஒலிநாடாவில் காலி இடம் – ஆசி).

72 பெர்ட் எனக்கு முன்னால் சென்று வழி காண்பித்துக் கொண்டிருந்தான். நான் அவனுக்குப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தேன். அவன் இப்படி சற்று உட்கார்ந்தான்.

பனி உலர்ந்திருந்தது. அவன் பின் பாக்கெட்டில்கை போட்டான். அவன் 'சான்ட்விச் தின்னப்போகிறான். அதன் பிறகு

நாங்கள் பிரிந்து போகப்போகிறோம் என்று எண்ணினேன்.

ஏனெனில் நாங்கள் மலை உச்சியை அடைந்திருந்தோம். அவன் இங்கு தன் கையை போட்டான்.

நான் என் ’சான்ட்விச்சை வெளியே எடுக்கத் தொடங்கி, என் துப்பாக்கியை வைக்க ஒரு இடம்பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் ’சான்ட்விச்சை வெளியே எடுத்து, சுற்றும் முற்றும் பார்த்தேன்.அவன் அந்த ஊதலை வேளியே எடுத்தான்.



”அதுமிகவும் கேவலமான தந்திரம்’ என்று எண்ணினேன். அவன் அந்த ஊதலை எடுத்து, தன் பல்லிக் கண்களினால் என்னை நோக்கினான். அவன் ஊதலை இப்படி வாயில் வைத்தான். நான். ”பெர்ட், இப்படிப்பட்ட காரியத்தை செய்யமாட்டாயென்று

நினைக்கிறேன். செய்வாயா?” என்று கேட்டேன்.

73 அவன், ’ஓ’ என்று கூறி விட்டு, அதை ஊதினான். நான் இருந்த இடத்திலிருந்து ஐம்பது கெஜம் தூரத்தில், ஒரு பெரிய பெண் மான் நிற்பதைக்கண்டு நான் வியப்புற்றேன்.

அந்த பெண்மான் ஒரு தாய் மான். அது பெரிய பழுப்பு கண்களுடனும், காதுகளை தூக்கிக் கொண்டும் அங்கு நின்று கொண்டிருந்தது.

பாருங்கள், அது ஊதல் சத்தத்தை கேட்டது. அது தாயானபடியால், தன் குட்டி

அழுகிறது என்று நினைத்துக் கொண்டது.

மற்ற மான்கள் வெளியே வந்தாலும் வராமற் போனாலும், அதற்குள் இருந்த ஏதோ ஒன்று அதை வெளியே இழுத்தது. அது ஒரு தாய்.

பெர்ட் இப்படி பார்த்தான், அவன் மறுபடியுமாக ஊதலை மெதுவாக ஊதினான். அந்த மான் வெளிப்புறத்தில் நடந்து வந்தது. அப்படி நடந்துவருவது வழக்கத்துக்கு மிகவும் மாறான ஒரு செயலாகும். அது தன் பெரிய தலையை உயர்த்தினது. அதன் கண்கள் சுற்றுமுற்று பார்த்தன.



74 சிறிது கழிந்து வேட்டைக்காரன் கையை நீட்டி துப்பாக்கியை எடுத்தபோது, அது வேட்டைக்காரனைப் பார்த்துவிட்டது. வழக்கமாக அந்நிலையில் மான்கள் துள்ளி வேகமாக ஓடிவிடும், ஆனால் இதுவோ சிறிதும் அசையவில்லை. அது அங்கு

நின்றுகொண்டு, தன் தலையைத் திருப்பி, அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

என்னே "பெர்ட், நீ அப்படிசெய்யக் கூடாது" என்று நான் எண்ணினேன். பாருங்கள், அது ஒன்றும் வேஷம் போடவில்லை. அது மாய்மாலமாக ஒன்றும் செய்யவில்லை. அது நடிக்கவில்லை. அந்த பாசம் அவளுக்குள் பிறந்திருந்தது. அது ஒரு தாய். அதன் குட்டி ஆபத்தில் சிக்கியுள்ளது. எனவே தன் உயிருக்கு ஆபத்து நேரிட்டாலும் ஒரு கவலையுமில்லை என்ற எண்ணத்துடன் அது குட்டியை தேடிக்கொண்டிருந்தது. தாய்

என்னும் முறையில் அதற்குள் ஒரு உணர்ச்சி இருந்தது. அது வேட்டைக்காரனைக் கண்டது. ஆனால் அதன் சிந்தையோ வேட்டைக்காரனைக் குறித்து அல்ல, அது ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்த மான் குட்டியின்மேல் இருந்தது.

75 அவன் முப்பது 30.06 ஆறு துப்பாக்கியின் பாதுகாப்பை கீழே இழுத்தான். ஓ, அவன் குறி தவறாதவன். அவன் துப்பாக்கியை மட்டப்படுத்தினான். நான் என் தலையை திருப்பிக்கொண்டேன். அதைக் காண எனக்கு சகிக்கவில்லை. அவனை என்னால் காண முடிய வில்லை. இன்னும்

இரண்டு நிமிடங்களில் அவன் அதன் உத்தமமான இருதயத்தை சுட்டு பிளந்துவிடுவான்.

அது தன் குட்டி ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டுள்ளது என்று எண்ணி அதைக்கண்டு பிடிக்க, வேட்டைக்காரன் புதரில் பதுங்கியிருக்கிறான். என்று அறிந்தும் கூட, வெளிவந்துள்ளது" என்று எண்ணினேன்.

அவன் அந்த நூற்று எண்பது கிரேயின் (grain) எடை கொண்ட தோட்டாவினால் அதன் உத்தமமான இருதயத்தைப் பிளந்து விடுவான். அவன் குறி தவறாதவன். அவன் துப்பாக்கியை மட்டப்படுத்தினான்.

அதை காண எனக்கு சகிக்காது என்று எண்ணி,

நான் திரும்பிக் கொண்டேன். நான், “கர்த்தாவே, அவன் அப்படி செய்யாதபடிக்கு அவனுக்குதவி செய்யும்” என்று ஜெபித்தேன். நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

அந்த ஏழை தாய் தன் குட்டியைத் தேடி அங்கு நின்று கொண்டிருக்கிறது. அது வேஷம் போடவில்லையென்று எனக்கு நன்றாகத் தெரியும். அது ஒரு தாய். மற்ற நேரத்தில் அது ஓடிவிட்டிருக்கும். ஆனால் அவளுக்குள் ஏதோ ஒன்று இருந்தது.



76 நான் காத்து, காத்து பார்த்தேன். ஆனால் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்கவேயில்லை என்ன நேர்ந்தது?" என்று நான் வியந்தேன். நான் காத்திருந்து, மெதுவாக திரும்பிப் பார்த்தேன். அந்த மான் அங்கு நின்றுகொண்டு, அவனையே உற்று நோக்குவதை

நான் கண்டேன். நான் துப்பாக்கி குழாயைபார்த்தபோது, அது இப்படி போய்க் கொண்டிருந்தது. அவன் அவன் குறிவைக்கமுயன்று கொண்டிருந்தான், அவனால் முடியவில்லை.

அவன் துப்பாக்கியை கீழே போட்டு என்னைப் பார்த்தான். அவனுடைய பெரிய கண்கள் மாறியிருந்தன. அவனுடைய கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவன் என் கால் சட்டையின்கால் பாகத்தைப் பிடித்துக்கொண்டு, ’பில்லி, நீர் பேசிக் கொண்டிருக்கும் இயேசுவிடம் என்னை வழி நடத்தும்” என்று கெஞ்சினான்.



77 அது என்ன? அவன் உண்மையான ஒன்றைக் கண்டான். பாருங்கள்? அந்த தாய்மான் தான் கொண்டிருந்த உண்மையான பாசத்தைக் காண்பித்தது. அது அங்கிருந்த கொடிய வேட்டைக்காரனையும் அசைத்துவிட்டது. நான்

கண்டதிலேயே மிகக்கொடூர இருதயம் படைத்தவன் அவன், அது நான் பிரசங்கித்த பிரசங்கத்தின் மூலம் அல்ல. அது அவன் கண்ட உண்மையான ஒன்றின் விளைவாகும். அது உத்தமமான ஒரு தாய் தன் குட்டியைத் தேடுவதாகும், அது அவனை கிறிஸ்துவினிடம் வழி நடத்தினது. இப்பொழுது அவன் எங்கள் சபையில் ஒரு 'டீக்கன்னாக இருக்கிறான். அவன் மிகவும் அருமையான கிறிஸ்தவனாக மாறிவிட்டான். ஏனெனில் வேஷம் போடப்படாத ஒன்றை அவன் கண்டான். அது பாவனை

விசுவாசம் அல்ல. அது உண்மையானது.


78 ஓ, சகோதரனே, சகோதரியே, இன்றிரவு இந்த சபை, இந்த ஜனங்கள், நீங்களும் நானும்! உண்மையான ஒன்று உள்ளது. அது வேஷம் போடப்பட்டது அல்ல, சிலர் வேஷம் போடுவதை நீங்கள் காணலாம், ஆனால் உண்மையான ஒன்றுண்டு. மனிதனிலுள்ள ஏதோ ஒன்று, அவன் தேவனுக்காக வாழும்படி செய்கிறது, சகோதரனே, இன்றிரவு வேஷம் போடாத உண்மையான பரிசுத்த ஆவி உள்ளது. அது உண்மையானது. இங்குள்ள எத்தனைபேர் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக,


கிறிஸ்துவுக்கு உத்தமமுள்ளவர்களாக இருக்க விரும்புகிறீர்கள்? மரணம், உபத்திரவம், வேறு என்ன நேரிட்டபோதிலும், அந்த மான் தாயாக இருந்தது போல், நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புகிறீர்கள்? நீங்கள் அப்படி இருக்க விருப்பங்கொள்கின்றீர்கள் அல்லவா?

★★★★★



*Only believe, Only believe*
*All things are possible,*
*Only believe.*


Only believe, Only
believe
All things are possible,
Only believe.


Only believe, Only
believe
All things are possible,
Only believe.

**Only believe,**
**Only believe**
**All things are possible,**
**Only believe.**


சகோ. பினேகாஸ்

போன்: 8838623242,
9551855108

Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in